**மீரிகம பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மீரிகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீரிகம வாராந்த சந்தைக் கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டிருந்த போதும் அது காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் ரூபா 1,737,500 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது காணி மற்றும் கட்டிடங்களை கணக்கிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ரூபா 3,121,000 தொகையான வேவல்தெனிய உப அலுவலக காணி, ரூபா 240,170 தொகையான கணனி மற்றும் ரூபா 2,625,895 தொகையான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் என 22 விடயங்களும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கூட்டுப்பசளை பாத்திரங்களின் விற்பனையால் கிடைத்த வருமானம் ரூபா 76,000 வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானங்கள் சரியான கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். | சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 141,430 இனங்காண முடியாத பெறுமதியொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிச்சயமற்ற கடன்கொடுத்தோருக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட முடியாது. | இந்த தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | வழங்கல் மற்றும் உபகரண செலவின கணக்கின் மீதி வருமான செலவின கணக்கிற்கு மாற்றும் போது ரூபா 130,658 தொகையான குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாமலிருப்பதற்கு கண்காணிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 13 கணக்கு விடயங்களின் கூட்டுமொத்தத்திற்கும் பட்டோலைகளின் பிரகாரம் அந்த கூட்டு பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 5,579,310 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.3 கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் காணப்படாமை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 386,959,341 தொகையான 06 விடயங்களுக்கான பதிவேடுகள் நாளது வரையாக்கப்படாமை, பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | ரூபா 1,785,841 பெறுமதியான 17 காணி மற்றும் கட்டிடங்களுக்காக கையளித்தல் கட்டளை மற்றும் உரித்துறுதி காணப்படவில்லை. | காணி மற்றும் கட்டணங்களுக்காக கையளித்தல் கட்டளை அல்லது உரித்துறுதி பெறப்பட வேண்டும். | சபையின் காணி மற்றும் கட்டிடங்களுக்காக கையளித்தல் கட்டளை அல்லது உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.4 போதியளவான அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இயந்திர மற்றும் இயந்திர உபகரண கணக்கில் ரூபா 6,801,344 தொகை மற்றும் தளபாடங்களும் பொருத்திகளும் கணக்கில் ரூபா 116,705 தொகை என்பவற்றை நீக்குவதற்காக முறையான அங்கீகாரம் ஒன்று பெறப்பட்டிருக்கவில்லை. | மெய்மெய்யாய்வு சபையின் பரிந்துரை பெறப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறையான அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) (i) | மீரிகம உப அலுவலகத்தில் அறவிட வேண்டிய வியாபார வரிகள் மற்றும் அனுமதிப் பத்திர கட்டணம் ரூபா 11,340 தொகை மற்றும் பள்ளேவல உப அலுவலகத்தில் அறவிட வேண்டிய வரி வருமானம் மற்றும் பிணை முறி என்பவற்றின் பெறுமதி ரூபா 64,281 தொகை முறையான அங்கீகாரம் இன்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | மீரிகம உப அலுவலகத்தில் இருந்து அறவிட வேண்டிய வேலைகள் மற்றும் வியாபார வரி ரூபா 7,340 தொகை மற்றும் அனுமதிப் பத்திரக் கட்டணம் என்பவற்றை பதவழிப்பதற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருறந்ததுடன், இது வரையிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டின் போது ரூபா 3,424,615 தொகையான பயிற்சி புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிப்பதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | முழுமையான அங்கீகாரத்தின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது அங்கீகாரம் இன்னும் கிடைக்கப்பெறாமையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | மீளாய்வாண்டில் ரூபா 2,351,028 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் 13 விடயங்கள் அங்கீகாரம் இன்றி கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்குகளில் இருந்து இவைகளை அகற்றும் போது முறையான அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் சட்டம். | ஆதன வரி அறவிடுவதற்காக புதிய மதிப்பீடொன்று 2009 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதன வரி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | 2013 ஆம் ஆண்டு முதல் புதிய மதிப்பீடு பெற்றுக் கொள்வதற்காக பொதுச் சபை நிர்மானம் பெறப்பட்டு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கோரப்பட்டிருந்தது. அந்த கோரிக்கை நிறைவேற்றாமல் இருந்த போது 2015 ஆம் ஆண்டு முதல் ஆதன வரி அறவிடல் 3 சதவீதம் முதல் 5 சதவீதம் வரை அதிகரித்து வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### (அ) பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,789,986 தொகையான முற்கொடுப்பனவு மீதியில் 01 – 03 வருடங்கள் வரை ரூபா 79,325 தொகை, 05 – 10 வருடங்கள் வரை ரூபா 13,226 தொகை மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 6,176,114 தொகை என்பன காணப்பட்டன. 10 வருடங்களுக்கு | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

மேற்பட்ட மீதியில் தனியார் நிறுவனத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 3,748,794 தொகை மற்றும் இனங்காணப்படாத ரூபா 17,139 தொகையான மீதியும் காணப்பட்டது.

(ஆ) **செலுத்தவேண்டிய கணக்குகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 90,615,551 தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 15,675,106 இனங்காணப்படாத மீதியும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,813,793 தொகை மற்றும் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான ரூபா 9,803,251 மீதியும் காணப்பட்டது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலுத்த வேண்டிய மீதியை செலுத்துவதற்கும் மிகுதியை இனங்கண்டு பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 27,677,960 தொகையான மீளச்செலுத்த வேண்டிய வைப்பு மீதியில் 01 வருடத்திற்கு குறைவான ரூபா 6,086,414 தொகை, 01–03 வருடங்களுக்கு இடையிலான ரூபா 3,767,860 தொகை, 03 – 05 வருடங்களுக்கு இடையிலான ரூபா 1,222,249 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 15,000 தொகை என்பன காணப்பட்டதுடன், இனங்காணப்படாத ரூபா 16,586,436 தொகையான மீதியும் காணப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,023,119 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,943,365 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 15,078,000 | 12,647,906 | 12,857,902 | 5,766,650 | 13,440,000 | 11,239,500 | 10,912,391 | 5,893,658 |
| (ii) | வாடகை | 41,118,000 | 29,675,510 | 28,724,868 | 4,570,211 | 23,110,000 | 25,427,754 | 22,949,530 | 3,635,115 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,041,500 | 1,665,024 | 1,666,024 | 64,775 | 2,163,350 | 1,682,083 | 1,683,083 | 60,725 |
| (iv) | ஏனைய வருமானம் | 224,343,000 | 277,054,531 | 234,747,197 | 84,110,622 | 169,595,850 | 148,313,467 | 170,669,237 | 41,601,297 |
| | | 282,580,500 | 321,042,971 | 277,995,991 | 94,512,258 | 208,309,200 | 186,662,804 | 206,214,241 | 51,190,795 |

### 2.2.1 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதன வரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரை ரூபா 1,982,359 தொகை, 03 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரை ரூபா 606,229 தொகை, 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை ரூபா 2,525,189 தொகை மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 569,690 தொகை என்பன அறவிட வேண்டி காணப்பட்டது. | ஆதன வரி அறவிடும் நடவடிக்கைகள் விரைவுபடுத்துதல் வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 300 ஆதன வரி அலகுகளில் இருந்து ஆதன வரி அறவிடப்படாது காணப்பட்ட போதும், ஆதனங்களை தடை செய்யும் கட்டளை 75 ஆதனங்களுக்கு மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆதனங்களை தடை செய்யும் அறிவித்தல் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 15 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | தேவையான உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்டு அவற்றிலுள்ள 15 விடயங்கள் தொடர்பாக உப விதிகள் எங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டுள்ள உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய 15 இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதன் செயல்முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிறைவேற்ற வேண்டிய பணிகள் சகலதும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்க வேண்டியுள்ளதுடன், அதன் செயல் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### (இ) பொதுமக்கள் முறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கடந்த ஆண்டில் கிடைக்கப்பெற்ற 435 முறைப்பாடுகளில் 98 இற்காகவும் மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற 519 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 403 இற்காகவும் தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொதுமக்கள் முறைப்பாடுகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு ஏனைய நிறுவனங்கள் தொடர்புபடுத்த வேண்டியிருந்தமை மற்றும் முறைப்பாடுகள் மற்றும் பிரதிவாதிகள் இணக்கப்பாட்டிற்கு வராமை |

| | | |
|---|---|---|
| | | போன்ற விடயங்களின் அடிப்படையில் தீர்வு காணப்படாதிருந்ததுடன், அவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 முதல் 2030 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில் அடைந்து கொள்ளும் அடிப்படை படிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் போது பொருளாதார அபிவிருத்தி மற்றும் மனித அபிவிருத்திகளுக்காக சிறந்த கிராமிய வீதி முறைமைகளை ஏற்படுத்துதல், சரியான சூழலொன்றை ஏற்படுத்துதல், நோய்களற்ற வாழ்க்கையொன்றுடன் வாழ்கின்ற சகல மக்களினதும் வாழ்க்கை நிலையை மேம்படுத்துதல் என்ற இலக்குகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்திகளை அடைந்து கொள்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீரிகம புகையிர நிலையத்திற்கு அருகில் உள்ள வியாபார கட்டிடத் தொகுதியின் கடைகளின் முழுமையான வாடகை பணமும், 03 கடைகளில் வாடகைப் பணத்தில் ஒரு பகுதியும் ஆன ரூபா 58,138,360 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீண்டும் கேள்வி கோருவதற்கு குழு பரிந்துரைத்துள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு வருமானப் பரிசோதகர் பதவிகள் 2006 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இருந்தும், முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களின் 02 பதவிகள் 2014 ஆம் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| ஆண்டிலிருந்தும், சுகாதார மேற்பார்வையாளர் பதவி 2012 ஆம் ஆண்டிலிருந்தும், 07 வேலைக்கள தொழிலாளர்கள் 2017 ஆம் ஆண்டிலிருந்தும் வெற்றிடமாக காணப்பட்டனர். | | |

**(ஆ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த 08 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 519,302 தொகையும், இடம் மாற்றலாகிச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 256,701 தொகையும், சேவையை விட்டுச் சென்ற 13 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 263,115 தொகையும் அறவிட வேண்டிக் காணப்பட்டன. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கும் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 2,085,182 பெறுமதியான 21 காணி மற்றும் கட்டிடங்களுக்காக கையளித்தல் உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரித்துறுதி பெறப்படாத நிலையான சொத்துக்களுக்காக உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 3.4.2 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 700,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட உழவு இயந்திரம், 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 1,319,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட மஹேந்திரா கெப் வண்டி, 2013 ஆம் ஆண்டின் போது ரூபா | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 4,999,500 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட பெக்கோ லோடர் இயந்திரம், பெறுமதி குறிப்பிடப்படாத தார் சூடாக்கும் இயந்திரம் மற்றும் தம்பற என்பன பயன்படுத்த முடியாமல் சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |

**3.5 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் 23W பிரதீப்த (CFL) மின்குமிழ்கள் கொள்வனவு செய்வதற்காக கேள்வி கையளிப்பபட்ட நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யாமையின் காரணமாக கேள்விதாரர் 1000 மின்குமிழ்கள் வழங்கியதன் பின்னர் வழங்கலை இரத்துச் செய்திருந்தார். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கேள்வி கையளித்த நிறுவனத்துடன் தாமதமின்றி உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |